# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.236/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | காந்திபிச்சை | த-பெ | செல்லையா |
| ஊர்: | : | கானாத்தான்குடி | சமயம்: | |
| வயது: | : | 59/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.10.2025**

1ம் **எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கானாத்தான்குடியில் வசித்து சிறப்பு சார்பு ஆய்வாளராக உலகம்பட்டி காவல் நிலையத்தில் பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் 2013 ம் வருடம் பணியில் இருந்தபோது 19.10.2013 அன்று 21.30 மணிக்கு ரத்தினம் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண்.412/2013 இதச பிரிவு 392 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 3.** பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை

புகாரை யார் எழுதியது என்றால் புகார்தாரர் தான் எழுதினார். புகாரில் இரண்டு எதிரிகளின் எந்த விதமான அடையாளங்களும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் திருடு போனதாக சொல்லப்படும் 2 1/2 பவுன் தங்க செயின் என மட்டும் கூறப்பட்டு வேறு எந்த வித அடையாளங்களும் கூறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி தங்க செயினை அறுக்கும்போது காயங்கள் ஏற்பட்டதாக உள்ளதா என்றால் இல்லை. இரண்டு நபர்கள் வந்த வாகனத்தின் அடையாளங்கள் எதுவும் புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பொய்யான சொன்ன புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.15 14:56:22 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி.